இந்தச் சூழ்நிலையை எல்லாம் எண்ணிப் பார்த்து அடுத்தாற்போல் ஒரு முக்கியமான மசோதாவை நிறைவேற்றவேண்டும், இன்று கடைசி நாள் என்பதை எண்ணிப் பார்த்து இதில் யாருமே பேசாது இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி வைப்பார்களேயானால் மிக விரைவில் இந்த மசோதாவினை முடித்துக்கொண்டு அடுத்த மசோதாவிற்குச் செல்ல வாய்ப்பிருப்பதால் எல்லோரும் இதை ஏற்று பொறுக்குக்குழுவிற்கு விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் 139 (1)-வது விதிக்கிணங்க இச்சட்டமுன்வடிவின் பொறுப்பிலுள்ள மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை இக்குழுவின் உறுப்பினராக நான் நியமிக்கிறேன்.

(5) அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: Mr. Deputy Speaker, Sir, I move—

'That item III—Government Motion be taken up before item (1) under 'Government Bills'.

The motion was put and carried.

(ஆ) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின்கீழ் விவர அட்டவணைக்கான வரைவுத் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/71) 431 (3) பிரிவின்கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்களால், மேற்படி சட்டத்தின் II -ஆம் விவர அட்டவணையை மாற்றிச் செய்யக் கருதப்பட்டுள்ள கீழ்க்காணும் வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

வரைவுத் திருத்தம்.

"1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/71), II -ஆம் விவர அட்டவணையில் உள்ள இரண்டாவது வரம்பு நிபந்தனையின் கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் 17 (1) விதியில் IX -வகுப்பு என்பதும் அதன் தொடர்பான பதிவுகளும் நீக்கப்பட வேண்டும்."